## சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமத்துடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) நியம இல 01 இன் படி கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்ட கணக்கீட்டு பற்றிய வெளிப்பாடுகளின் கீழ் நிதியத்திற்காக சேர்க்கப்பட்ட வருமானத் தலைப்புக்களில் வரவுகளின் நிச்சயமற்ற தன்மை, நிதியத்தின் நடவடிக்கைகளுக்காக அரசின் பங்களிப்பு இல்லாமை, இவ்வருடத்திற்கு செலவிடுவதற்கு போதிய நிதியம் இல்லாமை, இவ்வருடத்திற்கான வரவு | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். நிதியத்தின் வருமான வழிகள் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டமை, அரசின் பங்களிப்பு இல்லாமல் போனமை என்னும் காரணங்களினால் நிதியத்தின் மீதி போதாமையினால் அவ்வருடத்தின் செலவுகளை தாங்குவதற்கு போதுமான நிதி இல்லாமையினால் | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு அமைய நிதியத்தின் நிலைத்தகு தன்மை குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவு திட்டம் தயாரிக்கப்படாமை ஆகிய காரணங்களினால் நிதியத்தின் தொடர்ச்சியான நிலைப்பாடு பற்றி உறுதி செய்ய முடியவில்லை. | உண்டான நிலைமையினால் அவ்வருடத்தின் மதிப்பீட்டை தயார் செய்யாது ஆயினும், நிதியத்தின் குறிக்கோள் ஓரளவுக்கு அல்லது அடைவதற்கு வெளிநிறுவனங்கள் மற்றும் சுயேட்சை குழுக்களின் ஆதரவில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது. | |
| (ii) | நியம இல 07 இன் 25 ஆவது பந்தியின் படி பணம் பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்களுக்காக சொத்துக்கள் கைப்பற்றப்பட்டிருப்பின், அச்செலவு அச்சொத்து கைப்பற்றப்பட்ட திகதிக்கு நிலவிய நியாயப் பெறுமதிக்கு மதிப்பிடப்பட வேண்டும். ஆயினும், சிறைச்சாலை நிறுவனங்கள் 02 இன் அன்பளிப்பு சொத்து உருப்படிகள் 33 இன் நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | அச் சொத்துக்கள் குறித்து மதிப்பீட்டு குழு ஒன்று அமைக்கப்பட்டு சந்தை ஆய்வு மூலம் பெறுமதியிடப்பட்டு 2019 ஆம் ஆண்டு இறுதிக் கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச பிரிவு கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அன்பளிப்பாக கிடைக்கும் சொத்துக்களின் பெறுமதி கணக்கு வைப்பதற்கு கணக்கீட்டு கொள்கை ஒன்றை இனங்காணாமை காரணமாக 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அன்பளிப்பு சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதி ரூபா 9,076,568 எனினும், அத்திகதிக்கு அன்பளிப்பு சொத்துக்களின் ஒதுக்கக் கணக்கு மீதி ரூபா 21,920,102 என குறிப்பிடப்பட்டிருந்தது. | அன்பளிப்பு சொத்துக்கள் என கிடைக்கப் பெறும் சொத்துக்களின் பெறுமதி இனங்காணப்பட்டு அப்பெறுமதி மூலதனமாக்கப்படுவதற்கு இலவசமாக சொத்து அன்பளிப்புகள் ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2018.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான அந்த கணக்கின் மீதி ரூபா 21,920,102 ஆகும். இந்த மூலதனமாக்கப்பட்ட வெகுமதி சொத்துக்களின் | இனங்காணப்பட்ட கணக்கீட்டு கொள்கைக்கு அமைய அன்பளிப்பு சொத்துக்கள் பிழையின்றி கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பயன்பாட்டின் போது வருடாந்த பெறுமானத்தேய்வுகள் அந்நந்த வருடத்தின் வருமான செலினக் கணக்கில் பதிவழிக்கப்பட்டுள்ளது. அந்த காரணத்தால் பெறுமானத் தேய்வுகளுக்குரிய சமனான பெறுமதியில் சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்தின் வெகுமதிச் சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதி, பெறுமானத் தேய்வுகள் கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) போகம்பர சிறைச்சாலை தும்பர சிறைச்சாலை மற்றும் ரிமான்ட் சிறைச்சாலைகளில் காணாமல் போன அன்பளிப்புக்களின் பெறுமதி முறையே ரூபா 181,365 மற்றும் ரூபா 46,500 ஆன சொத்துக்கள் புத்தகங்களில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்வரும் காலங்களில் பௌதீக அடிப்படையில் காணப்படாத பொருட்கள் முறையாக புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கு தேவையான ஆலோசனைகள் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு பெற்றுத்தர குறித்துக்கொள்ளப்பட்டது எனவும் எதிர்வரும் காலங்களில் முறையான குழு ஒன்றை நியமித்து அதன் மூலம் இச்சொத்துக்களை புத்தகங்களில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) இவ்வாண்டில் சிறைச்சாலை நிறுவனங்களுக்கான அன்பளிப்பு சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,158,133 என குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும், தெரிவு சோதனைக்கமைய 11 நிறுவனங்களின் அன்பளிப்பு சொத்துக்களின் பெறுமதி | அன்பளிப்பு சொத்துக்களை கணக்கு வைப்பதில் முறையான வடிவமைப்பின் படி சரியான பெறுமதியை அனுப்ப சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்க ஆலோசனை வழங்க குறித்துக் | அனைத்து சொத்துக்களும் கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ரூபா 520,030 இனால் வித்தியாசப்பட்டதுடன் 03 நிறுவனங்களினால் ரூபா 70,900 பெறுமதியான அன்பளிப்பு சொத்துக்கள் உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2 நிறுவனங்களினால் உறுதி செய்யப்பட்ட அன்பளிப்பு சொத்துக்களின் பெறுமதி ரூபா 255,275 தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | கொள்ளப்பட்டது என தெரிவிக்கின்றேன். |

## 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கபடாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| அன்பளிப்பு சொத்து பெறுமானத் தேய்வு | 2,220,016 | அன்பளிப்பு சொத்துக்களின் உரிய உப ஆவணம் | கணக்காய்வினால் குறிப்பிடப்பட்ட அன்பளிப்பு சொத்து பெறுமானத்தேய்வு பதிவேட்டில் 1997 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு மீதி என மட்டும் குறிப்பிடப்பட்ட 2,220,016 ஆன அன்பளிப்பு சொத்துக்களின் மீதியொன்று பேரேட்டில் முன் கொண்டு வரப்பட்ட மீதியாக நிலவிய போதிலும், அது அவ்வாறே கொண்டு செல்லப்படும். | அன்பளிப்பு சொத்து ஆவணப்படுத்தப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1979 இன் 54 ஆம் இலக்க சிறைச்சாலைகள் திணைக்கள கைதிகள் நலன்புரி நிதிய திருத்திய சட்டம் (அஅ) உப பிரிவு | பொது வைப்புக் கணக்கு மற்றும் நிறுவன பாதுகாப்பு பெட்டகத்தினுள் வைப்பிலிடப்பட்டுள்ள ஒரு வருடத்துக்கு குறையாத காலத்துள் உரிமை கோரப்படாத வேதனம் மற்றும் | உரிய நிறுவனங்களினால் உரிமை கோரப்படாத நிதி குறித்த காலப்பகுப்பாய்வு அறிக்கை ஒன்றை கோரி அவற்றை சிறைச்சாலை நலன்புரி நிதியத்துக்கு செலவு | சிறைச்சாலை நலன்புரி நிதிய சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தனிப்பட்ட நிதி ரூபா 312,785 ஆனது நிதியத்திற்கு செலவு வைக்கப்படவில்லை. | வைக்க சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அவசியமான ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியிரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப்பிரமாணம் 104 | வெலிகட, மெகசின், அனுராதபுரம் எனும் சிறைச்சாலைகளில் உள்ளக கலவரங்களில் பாதிப்புக்குள்ளான அன்பளிப்பு சொத்துக்கள் மற்றும் காலி சிறைச்சாலையில் 2014 டிசம்பர் 26 சுனாமியால் அழிவுக்குள்ளான பொருட்கள் குறித்து நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கடிதம், ஆவணங்களில் குறைபாடு இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்து அனுப்புமாறு உப காரியாலயங்களுக்கு நினைவூட்டல் அனுப்பப்பட்டதுடன் மகசின் சிறைச்சாலை சம்பவம் குறித்து புத்தகங்களிலிருந்து நீக்குதல் விண்ணப்பபடிவம் அரச கணக்கு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறுகள் ரூபா 281,121 எனும் மிகையாக இருந்ததுடன், கடந்த ஆண்டின் பற்றாக்குறையானது ரூபா 2,783,683 ஆக இருந்தது. அதன் காரணமாக நிதி பெறுபேறுகளில் ரூபா 3,064,804 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இவ் அதிகரிப்பிற்கு கடந்த வருடத்தை ஒப்பிடும் போது நிதியத்தின் வருமானம் ரூபா 391,370 இனால் அதிகரித்துள்ளமை மற்றும் கடந்த ஆண்டின் நலன்புரி சங்க செலவுக்காக ரூபா 2,853,749 செலவிடப்பட்ட போதிலும், இவ்வாண்டில் அதற்காக எவ்வித செலவும் செய்யப்படாமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1973 இல் 18 ஆம் இலக்க சிறைச்சாலை நலன்புரி நிதிய சட்டத்தின் 5 ஆம் உப பிரிவுக்கமைய அடைய சிறைக் கைதிகளின் நலன்புரி நிதியத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சிறைக் கைதிகளுக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் இவ்வாண்டில் நடைபெறவில்லை அதனால் 2018 சனவரி 01 ஆந் திகதி நடைபெற்ற நிதியத்தின் திறைசேரி மீதி ரூபா 921,313 மற்றும் இவ்வாண்டின் பெற்றுக்கொண்ட ரூபா 1,915,620 வருமானம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2018.01.01 ஆந் திகதி நிலவிய ரூபா 921,313 மீதி அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களின் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பாவிக்க போதுமானதாக இல்லாமையால் போதுமான மீதியாக ஆக்குவதற்கு 2018 ஆம் ஆண்டில் இறுதிவரை ஆன போதிலும், நிதியத்தின் மீதி நிகழ்ச்சித்திட்டம் குறித்து பாவிக்காது ஆயினும், சிறைச்சாலைகளுக்காக நடாத்தப்படும் நலன்புரி நடவடிக்கைகளின் கலந்துரையாடல்கள் நிறுவனங்கள், சிறைக்கைதி நலன்புரி உப சங்கம், வெளி நிறுவனங்கள் மற்றும் நபர்களின் பங்களிப்புக்களில் நடத்தப்பட்டது. | இருக்கும் நிதி உச்சமாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் நிதியத்தின் வருமானம் ரூபா 1,915,620 எனினும், வருமானத்தை அதிகரிக்க சட்டத்தின் படி ஏற்பாடு செய்யப்பட்ட வருமான தலைப்பு 10 இன் கீழ் வருமானம் சேர்க்கப்படுவதற்கான முறையொன்று இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கான எவ்வித அவதானமும் செலுத்தப்படவில்லை. | - மேற்படி - | இருக்கும் நிதி உச்சமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய இல PF/423 ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிருபத்தின் குறிப்பிட்டவாறு நிதியத்தின் குறிக்கோள்களுக்கு ஏற்றவாறு திறைசேரியால் அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரிப் படிவங்களிற்கமைய தயாரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத்திட்டம் உரிய அனுமதிகளுடன் செப்டம்பர் 30 ஆந் திகதிக்கு முன் தேசிய வரவு செலவு திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட நிதியத்தின் மீதி 2018 ஆம் ஆண்டுக்கு மதிப்பீடு ஒன்றை தயாரிப்பதற்கு போதுமானதாக இல்லை என்பதால் மதிப்பீடு ஒன்றை தயாரித்து சமர்ப்பிக்க முடியாமல் போனது. 2019 ஆம் ஆண்டுக்கான உரியவாறான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | அரச நிதி சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |